
அணு குண்டும் - தளபதியும்

உம்பர்ட்டோ ஈக்கோ தமிழில் கிருஷ்ணன்



ஒரு ஊரில் ஒரு அணு இருந்தது



அதே ஊரில் தங்க பதக்கங்களால்
அலங்கரிக்கப்பட்ட சீருடையை
அணியும் ஒரு தளபதியும் இருந்து வந்தான்.



அண்டத்தில் உள்ள எல்லாமே
அணுக்களால் ஆனவையே.

அணுக்கள் மிக சிறியவை. பல
அணுக்கள் இணையும் போது
ஒரு மூலக்கூறு உருவாகிறது.
அதிலிருந்தே எல்லாமும்
உருவாகிறது.

நாம் குடிக்கும் பால்
அணுக்களால் ஆனவையே
நாம் சுவாசிக்கும் காற்று
அணுக்களால் ஆனவையே
சுடும் தீயும் அணுக்களால்
ஆனவையே
அம்மாவும் அணுக்களால்
ஆனவளே
ஏன் நாம் எல்லோரும்
அணுக்களால் ஆனவர்களே



எல்லா அணுக்களும்
இணக்கமாக இருக்கும் போது அண்டத்தில் உள்ள எல்லாமும் சுமுகமாக வேலை செய்கிறது. உயிர்கள் அனைத்தும் வாழ்வதற்கு இதுவே அடிப்படை ஆகும்.


அணுக்கள் இணக்கமாக இயங்க வில்லையெனில் ஒன்றன் மேல் ஒன்று உராய்ந்து மேலும் பல அணுக்களை தீவிரமாக செயல்படுத்திவிடும்.

அப்படி ஆகும் போது ஒரு மிக பெரிய வெடிப்பு உண்டாகும் . அதுவே அணுக்களின் பேரழிவாகும்.



சரி, நம் கதைக்கு வருவோம்! நம்முடைய அணுவோ மிக சோகமாக இருந்தது ஏனென்றால் அதை ஒரு அணு குண்டுக்குள் அடைத்து விட்டார்கள்

நம் அணுவும் மற்ற அணுக்களோடு சேர்ந்து அந்த ஒரு நாளுக்காக காத்து கொண்டிருந்தது. அது எந்த நாள்? ஆம்! எந்த நாளில் அணு குண்டு வெடிக்கப்படுமோ அன்று தானும் அழிந்து எல்லாமும் கூண்டோடு அழிக்க படும்.



நம் உலகில் இப்போது நிறையவே தளபதிகள் உள்ளனர் அணுகுண்டுகளை தயாரிப்பதே அவர்களின் வாழ்க்கையில் மிக முக்கிய வேலையாக உள்ளது.

நம்முடையோ தளபதி அவனுடைய மாடியறையில் அணுகுண்டுகளை குவித்து வைத்திருக்கிறான்.
"என்னிடம் எப்போது நிறைய குண்டுகள் சேருகிறதோ அப்போது ஒரு அழகான போரை தொடங்குவேன்" என்று சொல்லி சிரித்தான்.

ஆம்! இத்தனை குண்டுகள் சேர்த்தவன் அதை வைத்து வேடிக்கையா பார்ப்பான்?



அடைத்திருந்த அணுக்கள் எல்லாம்
வேதனையோடு இருந்தன

அவர்களால் மிக பெரிய கேடு நடக்க
போவதை எண்ணி வருந்தின
குழந்தைகள் சாவார்கள்
அம்மாக்கள் சாவார்கள்
குட்டி பூனைகள் எல்லாம் சாகும்
கன்று குட்டிகள் எல்லாம் சாகும்
எல்லா வித பறவைகளும் சாகும்
ஏன் எல்லாமே அழிந்து போகும்

மொத்த ஊரே அழிந்து போகும்
சிகப்பு கூரைகள் கொண்ட வெள்ளை
வண்ணம் கொண்ட வீடுகள் அனைத்துமே
சாம்பலாகி போகும். அதன் அருகில்
உள்ள மரங்களும் கருகி போகும் .




ஒரு கருப்பு ஓட்டையை தவிர

ஒன்றுமே மிஞ்சாது!



அணுக்கள் எல்லாம் தளபதியை
எதிர்ப்பதற்கு துணிந்தன

ஒரு இரவு சத்தமில்லாமல்
கூண்டிலிருந்து அணுக்கள்
எல்லாம் வெளியேறின. பாதாள
அறையில் போய் ஒளிந்து
கொண்டன.



அடுத்த நாள் காலை தளபதி மாடியறைக்கு
இன்னொரு விருந்தினருடன் வந்தார்.

இத்தனை குண்டுகளை உற்பத்தி
செய்வதற்கு எவ்வளவு செலவாயிற்று.
துறு பிடிப்பதற்கு இப்படியே விட்டு
விடுவதா ? நாட்டின் தளபதியாய் நீங்கள்
இருப்பதற்கு என்ன அவசியம் ? என்றான்
அந்த விருந்தாளி.

நீ சொல்வதும் உண்மை தான் என்றான்
தளபதி
போரை உடனிடியாக தொடங்கி விட
வேண்டும்
இல்லையென்றால் நம்ம பிழைப்பு கஷ்டம்
தான் என்றான் தளபதி




நாட்டில் போரை அறிவித்தான் தளபதி .



போர் செய்தி நாட்டில் தீ
போல பரவியது
அணு யுத்தம்
வெடிக்கப்போவது என்று
எல்லா மக்களும் பயந்து
போயினர்.
தொடக்கத்திலேயே இந்த
தளபதியை அணுகுண்டு
செய்வதை தடுத்திருந்தால்
இந்த நிலைமை நமக்கு
வந்திருக்குமா என்று பேசி
கொண்டனர் .

அதற்கெல்லாம் நேரம் கடந்து
விட்டது
எல்லோரும் நகரத்தை விட்டு
துண்டை காணும் துணியை
காணும் என்று ஓடி விட்டனர்.
ஆனால் எங்கே ஓடுவது?



தளபதியோ அணு
குண்டுகளை விமானத்தில்
ஏற்றி எல்லா ஊர்களிலும்
போட்டு கொண்டு வந்தான்.



குண்டுகள் நிலத்தில் விழும் போது வெடிக்கவில்லை (அணுக்கள் வெளியேறிவிட்டதால்)
மக்கள் உயிர் தப்பிவிட்டது என்று மகிழ்ச்சி அடைந்தனர். அவர்களால் நம்பவே முடியவில்லை. மக்கள் குண்டுகளை பூந்தொட்டிகளாக பயன்படுத்தினர்.


அணுகுண்டுகள் இல்லாத இந்த உலகம் மிகவும் அழகானது என்று மக்கள் உணர்ந்தனர் .



போர் என்பதே நமக்கு வேண்டாம் என்று
முடிவு செய்தனர்
அம்மாக்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்தனர்
அப்பாக்கள் எல்லாம் ஆனந்தம்
அடைந்தனர்
எல்லோரும் குதூகலமாகினர்.



சரி நம் தளபதி என்னானான்?
போறே இல்லாத உலகில் இந்த தளபதிக்கு என்ன வேலை?
பணியிலிருந்து அவனை துரத்தியாச்சு



தங்க பதக்கங்களால் அலங்கரிக்கப்பட்ட அவனுடைய ஆடையை எப்படி வீணடிப்பது?
அதனால் அவன் ஒரு ஓட்டலில் கதவை திறக்கும் காவலாளியாக வேளையில் சேர்ந்தான்
உலகே அமைதியாக இருந்ததால் நிறைய சுற்றுலா பயணிகள் வந்தனர்
தளபதியின் பழைய எதிரிகளும் வந்தனர், ஏன் அவன் ஆணையிட்ட வீரர்களும் அவ்போது வந்தனர்.



மக்கள் வரும்போதும் போகும்போதும் தளபதி பெரிய கண்ணாடியிலான கதவை திறந்து விட்டான்.
விருந்தினர்களை நோக்கி வணக்கமும் செய்வான்.
சில விருந்தினர்கள் அவனை அடையாளம் கண்டுகொள்வார்கள். இறுக்கமான பார்வையில் அவனை நோக்கி இந்த ஓட்டல் மிக மோசமானது, என்ன ஒரு தண்டம்! என்று கூறி செல்வார்கள்.

வாயடைத்து நின்றான் அந்த

தளபதி. சமூகத்தில் அவனுக்கு இப்போது

எந்த மதிப்போ, முக்கியத்துவமா கிடையாது.

